**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 61/2025**

**Prosecution witness : எ.ம.சா. 1** **Date : 17.11.2025.**

| | |
|---|---|
| **Name : சங்கீதா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1) 30.05.2022 ம் தேதி சங்கீதா ஆகிய நான் கொடுத்த புகார் மனு **எ.ம.சா.ஆ.1** ஆகும்.

2) 10.08.2023 ம் தேதி தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தில் அளித்த புகார் மனு **எ.ம.சா.ஆ.2** ஆகும்.

3) ஒப்புகை அட்டை **எ.ம.சா.ஆ.3** ஆகும்.

4) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தில் இருந்து 22.08.2023 தேதிய காவல் துறை கண்காணிப்பாளர் சேலம் அவர்களுக்கு விசாரிக்க கோரி அனுப்பி வைக்கப்பட்ட மேலெழுத்து அறிக்கை **எ.ம.சா.ஆ.4** ஆகும்.

5) 12.01.2024 ம் தேதி சேலம் E.S.I மருத்துவமனையில் சேர்ந்ததற்கான மருத்துவ நோட்டு **எ.ம.சா.ஆ.5** ஆகும்.

6) 08.08.2024 ம் தேதிய சண்முகா மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்பு சான்றிதழ் **எ.ம.சா.ஆ.6** ஆகும்.

7) 01.07.2024 ம் தேதிய சேலம் E.S.I மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்பு சான்றிதழ் **எ.ம.சா.ஆ.7** ஆகும்.

8) 30.09.2024 ம் தேதியன்று எடுக்கப்பட்ட புகைப்படம் எண்ணிக்கை 11 **எ.ம.சா.ஆ.8** ஆகும். ( ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது)

9) 27.05.2025 ம் தேதியன்று இந்த வழக்கு சம்பவத்திற்கு பின்பு சம்புவள்ளி டாய்லெட் பைப்பை ஓபன் செய்ததற்கான புகைப்படம் **எ.ம.சா.ஆ–9** ஆகும்.

10) 10.06.2025 ம் தேதியன்று CD with receipt **எ.ம.சா.ஆ.10** ஆகும்.( மேற்படி சிடி மற்றும் புகைப்படத்தை பதிவிறக்கம் செய்து கொடுத்த நபர் மூலம் குறியீடு செய்யாமல் அவர்களாகவே குறியீடு செய்ய அரசு தரப்பில் ஆட்சேபனை செய்யப்படுகிறது)

11) 30.09.2024 ம் தேதி கருமலைக்கூடல் காவல் நிலையத்தார் வழங்கிய சி.எஸ்.ஆர் நெ.261/2024 அசல் **எ.ம.சா.ஆ.11** ஆகும்.

12) 02.10.2024 ம் மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட விடுவிப்பு அறிக்கை **எ.ம.சா.ஆ.12** ஆகும்.

13) 07.10.2024 ம் தேதி 1 ம் எதிரி மாவட்ட காவல் கண்காணிப்பளார் அவர்களிடம் அளித்த புகார் மனு **எ.ம.சா.ஆ.13** ஆகும்.

14) 21.10.2025 ம் தேதி 1 ம் எதிரிக்கு பிரபு அனுப்பிய வாட்ஸ் அப் மெசேஜ் **எ.ம.சா.ஆ.14 ஆகும்.**

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

1) எனக்கும் மாமியார் குடும்பத்திற்கும் சொத்து பிரிக்க முன்விரோதம் உள்ளதா என்றால் உள்ளது. அது சம்மந்தமாக முன்பகை இருந்து வருகிறதா என்றால் உள்ளது. சொத்து மற்றும் வீடு பாகம் பிரிப்பது சம்மந்தமாக சிவில் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் மேட்டூர் சிவில் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. 30.09.2024 ம் தேதி சம்பவம் நடைப்பெற்றது என்றால் சரிதான்.

2) நான் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ 2 யை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 2022 ம் வருடமும், 2023 ம் வருடமும் தான் அனுப்பியுள்ளேன். இந்த சண்டைக்கும் அந்த மனுவுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புகாருக்கான தொடர்ச்சியாக கோவப்பட்டு காழ்புணர்ச்சியால் இன்று வரை என் கணவர் கட்டிய வீட்டில் இருக்கக்கூடாது விரட்டியடிக்க வேண்டுமென்று தொடர்ந்து தொல்லைகள் கொடுத்து வருகிறார்கள்.

3) எனக்கு உடல் சம்மந்தமாக என்ன பிரச்சனை என்றால் மார்பகத்தின் அருகில் கட்டி இருந்ததால் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. ESI மருத்துவமனையில் கொடுத்த அறிக்கைக்கும் இந்த பிரச்சனைக்கும் சம்மந்தம் இல்லை என்றால்

சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சண்முகா மருத்துவமனை டிஸ்சார்ச் சம்மரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சம்பவம் நடக்க 1 மாதம் முன்பாக எனக்கு இருந்த நோய் காரணமாக சிகிச்சை எடுத்தேன். இந்த வழக்கிற்கும் அதற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான்.

4) நான் தாக்கல் செய்த 11 புகைப்படங்களில் தேதி, நேரம் பதியவில்லை என்றால் புகைப்படத்தில் இல்லை, வீடியோவில் உள்ளது. புகைப்படத்தில் நான் இல்லை என்றால் ஆமாம், ஏனென்றால் நான் தான் புகைப்படம் எடுத்தேன். நான் தான் புகைப்படம் எடுத்தற்கு என்ன ஆதாரம் என்றால் என்னுடைய செல் போனில் தான் எடுத்தேன். எ.ம.சா.9 ல் உள்ள புகைப்படத்தில் உள்ள கட்டிடம் குறித்து உரிமை மூலம் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வீட்டில் தான் நான் குடியிருந்து வருகிறேன். புகைப்படத்தில் கழிவு நீர் தேங்கியுள்ள மாதிரி உள்ளதா என்றால் இல்லை.

5) வீடியோவில் உள்ளவற்றை யார் பதிவிறக்கம் செய்தார் என்றால் நான் பதிவிறக்கம் செய்தேன். ஆனால் புகைப்படம் யார் எடுத்துகொடுத்தார்கள் என்றால் குஞ்சாண்டியூரில் உள்ள ஸ்டியோவில் எடுத்து கொடுத்தார்கள். என்மீது புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். எ.ம.சா.14 ல் உள்ள பிரபு என்பவரின் பெயர் இல்லை என்றால் ஆமாம், ஆனால் அவருடைய மகனின் புகைப்படம் உள்ளது. இதில்  என்ன குறுஞ்செய்தி உள்ளது அதனை நான் பதிவிறக்கம் செய்யவில்லை என்றால் ஆமாம்.

6) நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத ஒரு ஆவணம் என்றால் அவ்வாறு இல்லை. எங்களுக்கும், எதிரிகளுக்கும் பாகம் பிரிப்பதில் உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு புகார் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. ராஜேந்திரன் காவல் உதவி ஆய்வாளர் புகார்தாரருக்கு உறவினர் என்பதால் அவர்மீது வேண்டுமென்றே பழி சுமத்துக்கிறேன் என்றால் அவ்வாறு இல்லை. அவருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள புகாரிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக மேலே சொன்ன

ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதற்காக புகார்தாரர் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.18 10:37:46 +0530

Judicial Magistrate No.II,
Mettur.